# சீர்காழி நகராட்சி
# சாதாரண கூட்டம்



**2018–ம் ஆண்டு மார்ச் மாதம் 19.03.2018 திங்கள் கிழமை மாலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர், ஆணையர்
சீர்காழி நகராட்சி.

| | |
|---|---|
| பொருள் எண்.1 | சீர்காழி நகராட்சி கணினி பதிவு செய்யும் பணி செண்டிரலைஸ்டு செய்யப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. ஆதலால் கணினி பதிவுக்கு கூடதலாக நேரமாகிறது. மேலும் கணினியில் புதிய கணக்கீட்டு முறை பதிவு, பிறப்பு – இறப்பு பதிவு செய்தல் பணி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களிடமிருந்தும் மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களிடமிருந்தும் வரும் கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் ஆகியவற்றிற்கு உடனடியாக பதில் தரவேண்டி உள்ளதாலும் மேற்படி பணிகள் உடனுக்குடன் தாமதமின்றி செய்வதற்கு கணினி தெரிந்த இரண்டு நபர்களை முற்றிலும் தற்காலிமாக (தினக்கூலி அடிப்படையில்) மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகளின் 2017 –2018 ஆம் ஆண்டிற்கு நியமனம் செய்து கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.210000/– யை பொது நிதியிலிருந்து மேற்கொள்தற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ.கு) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.598/2018/எச்.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–175 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது |
| பொருள் எண்.2 | சீர்காழி வட்டம் எடமணல் கிராமத்தில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கலவை உரத்திடலில் பாதுகாவல் பணி மற்றும் சீர்காழி ஈசானிய தெரு நகராட்சிக்கு சொந்தமான கலவை உரத்திடலில் ஒரு பகல்நேர காவலர் மற்றும் ஒரு இரவு நேர காவலர் பணியினை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் மனித சக்தியை பெற்று பாதுகாவல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்த காலம் 31.3.2018 வுடன் முடிவடைகிறது. எனவே தொடர்ந்து 2018 –2019 ஆம் ஆண்டு பாதுகாவல் பணியினை மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.295650/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ.கு) மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.600/2018/எச்.1) |

| | |
|---|---|
| | நகர்மன்ற தீர்மான எண்–176 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது |
| பொருள் எண்.3 | அரசாணை எண்-77 பள்ளிகல்வி(பக4(1)) துறை நாள்-13.04.2015, அரசானை (MS) எண்-166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை நாள் 23.11.2016 ஆகியவற்றில் நகராட்சி எல்லைக்குள் செயல்படும் அரசு பள்ளிகள், நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை தூய்மை செய்தல் மற்றும் பள்ளி வளாகங்களை தூய்மை செய்தல் ஆகிய பணிகளை தொடர்புடைய நகராட்சிகள் மேற்கொள்ள வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் இந்நகராட்சில் வழக்கமான துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு குறைவான துப்புரவு பணியாளர்கள் உள்ளனர். எனவே, மேற்கண்ட பணிகளை நகராட்சி பணியாளர்களைக் கொண்டு மேற்க்கொள்வது சாத்தியமற்ற நிலையில் உள்ளது. எனவே மேற்படி பணிகளை மேற்க்கெள்ள தேவையான மனித சக்திகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி மேற்க்கொள்ள வேண்டியுள்ளது.<br>சீர்காழி நகராட்சி எல்லைக்குள் செயல்படும் 6- நகராட்சி தொடக்கப்பள்ளிகள், 2- நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 1- நகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆகிய 9- பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்தல் மற்றும் பள்ளி வளாகத்தினை சுத்தம் செய்து பராமரிப்பதற்கும் ஒப்பற்த அடிப்படையில் 10 மனித சக்திகளை கொள்முதல் செய்து ஒராண்டு காலத்திற்கு மேற்க்கொள்ளவும் (2018-2019) அதற்கான செலவினம் மற்றும் துப்புரவு பணிக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு தேவையான செலவீனம் ஆகியவை நேர்த்து மொத்த தோராய செலவீனம் ரூ.925000/– மற்றும் பத்திரிக்கை விளம்பரச் செலவு ரூ.100000/– ஆக மொத்தம் ரூ.1025000/– க்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ.கு) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.599/2018/எச்.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–177 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது |
| பொருள் எண்.4 | பொது சுகாதாரப்பிரிவில் 2018 – 2019 ஆம் ஆண்டில் கீழ் கண்டுள்ள இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவீனத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண் | செலவினம் – விவரம் | உத்தேச செலவினம் தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், ஒட்டுநர்கள், துப்புரவு பணி, மேற்பார்வையாளர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும் சீருடைகள் மற்றும் தையற்கூலி | ரூ.1.50 இலட்சம் |
| 2 | துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகள் (40 ஜோடி ) | ரூ.30 ஆயிரம் |
| 3 | Reflected Jacket ( 40 எண்ணிக்கைகள்) | ரூ.50 ஆயிரம் |
| 4 | துப்புரவு பணிக்கு தேவைப்படும் தளவாட சாமான்கள் | ரூ.2.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 5 | பொதுசுகாதார லாரிகளுக்கு , அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய சாலை வரி, இன்சுரன்ஸ், பசுமை வரி, தகுதிச்சான்று கட்டணம் உள்பட அனைத்து வரிகள் | ரூ.1 இலட்சம் |
| 6 | தகுதி சான்று கட்டணம் பெற (Fc) வாகனதில் பழுதுகள் சரிசெய்தல் | ரூ.1.50 இலட்சம் |
| 7 | பொது சுகாதார லாரிகளுக்கு டயர்,டியூப், உள்ளிட்ட உதிரி பாகங்கள் பொருத்துதல் | ரூ.1.00 இலட்சம் |
| 8 | பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்களில் பணிநேரத்தில் ஏற்படும் திடீர் பழுதுகளை மரா மத்து செய்வதற்கு | ரூ.1.00 இலட்சம் |
| 9 | நீர்த்த சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர் , பினாயில் உள்ளிட்டவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ளுதல் | ரூ.2.00 இலட்சம் |
| 10 | கொசு ஒழிப்பிற்கு தேவைப்படும் பைரத்திரம்,பேக்டிசைடு, மற்றும் அபேட் மருந்து வாங்குதல் | ரூ.2.00 இலட்சம் |
| 11 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் குறித்தும் சுகாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள் ஆட்டோ விளம்பரம் பிளக்ஸ் பிட் சுவர் விளம்பரம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.1.00 இலட்சம் |
| 12 | டெங்கு காய்ச்சல் குறித்து ஆட்டோ மூலம் விழிப்புணர்வு மற்றும் பிளக்ஸ் போர்டு வைத்தல், Hand Bills அச்சடித்து வழங்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.50 ஆயிரம் |
| 13 | கலவை உரத்திடங்களில் உள்ள குப்பைகளை அவ்வப்போது JCB மற்றும் புல்டோசர் மூலம் சமன் செய்தல் | ரூ.1.50 இலட்சம் |

மேற்கண்ட இனங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(அ.கு) மன்றம் அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண்.685/2018/எச்.1)
நகர்மன்ற தீர்மான எண்–178 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்.5**

சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான ஈசானிய தெரு, கலவை உரத்திடலில், கலவை உரம் தயார் செய்யும் பணிக்கு தனியார் மூலம் 15 துப்புரவுப்பணியாளர்களை கொண்டு செயல்படுத்திட 2018–2019 ஆம் ஆண்டிற்க்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.17,41,000/– மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு , பத்திரிக்கை விளம்பரம், செய்திமலர் வினம்பரம் ஆகியவற்றிக்கு ஆகும் உத்தேச செலவினம் 1 இலட்சம் ஆக மொத்தம் 1841000/– ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து செலவுகள் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.
(அ.கு) மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.785/2018/எச்.1)
நகர்மன்ற தீர்மான எண்–179 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்.6**

01.04.2018 முதல் 30.03.2018 வரை உள்ள 30 நாட்களுக்கு , மேற்கண்ட 10 வார்டுகளில் திரு.எல்.ஞானவேல், ஒப்பந்ததாரர் மூலம் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள அனுமதியும், அதற்க்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.313410/– ஐ நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம்

| | |
|---|---|
| | மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>(அ.கு) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.915/2017/எச்.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–180 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது |
| பொருள் எண்.7 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2,4,5,8,9,10,11,14,15,17 ஆகிய 10 வார்டுகளில் , திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், தனியார் மையம் மூலம் 31 துப்புரவுப் பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகளை 1.5.2018 முதல் 31.03.2019 வரை (288 நாட்கள்) உள்ள நாட்களுக்கு , மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம் அவர்களால் தெரிவிக்கப்பட தினக்கூலி தொகை ரூ.270 /– அடிப்படையில் , மேலாண்மை 31 பணியாளர்களுக்கு EPF மற்றும் ESI உள்ள அனைத்து அலவன்ஸ்க்கும் சேர்த்து தயார் செய்யப்பட உத்தேச செலவினம் ரூ.331900/– மற்றும் மாநில அளவில் பத்திரிக்கை விளம்பரம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1 இலட்சம் ஆக மொத்தம் ரூ3419000/– ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்க்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ.கு) மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.821/2018/எச்.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–181 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது |
| பொருள் எண்.8 | இந்நகராட்சிக்கு சொந்தமான 2018 – 2019 முதல் 2020 – 2021 வரை மூன்றாண்டு குத்தகை உரிமத்தினை அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 14.02.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் கோரி எவரும் முன்வரவில்லை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே கீழ்கண்ட இனங்களுக்கு வரப்பெற்றுள்ளது. உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | ஏல இனங்களின் விவரம் | உயர்ந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்தவரின் பெயர் மற்றும் முகவரி/ ஒப்பந்தப்புள்ளி நாள். | உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி 2016 – 2017 ம் ஆண்டிற்கான (ஓராண்டு தொகை ) | சென்ற ஆண்டு தொகை (2017 – 2018) | மூன்றாண்டு சராசரி தொகை | தற்போது உயர்ந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள தொகைரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி மீன் மார்க்கெட்டில் உள்ள கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு எஸ்.அய்யாபிள்ளை மொன்னையன்தெரு, சீர்காழி நாள்.14.02.2018 | ரூ. **1,68,000** | ரூ.1,76,400 | ரூ. **1,68,134** | ரூ. **2,65,000/-** |
| 2 | நகராட்சி மாமிச மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இ | திரு பி.சாகுல் அமீது ஜெயந்திரர் நகர் விளந்திடசமுத்திரம், | ரூ. **22,050** | ரூ.23,153 | ரூ. 22,067 | ரூ.**63,000/-** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சீர்காழி நாள்.14.02.2018 | | | | |
| 3 | நகராட்சி எல்லைக்குட்பட்ட இடத்திற்கு 1920 ம் ஆண்டு நகராட்சிகளின் சட்டம் 270 பிரிவின் கீழ் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு எம்.அய்யப்பன் மேலமாரியம்மன் கோயில் தெரு, சீர்காழி நாள்.14.02.2018 | ரூ.2,94,000 | ரூ.3,08,700 | ரூ.2,94,234 | ரூ.**416000/-** |
| 4 | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கில் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு பி.அன்பழகன் வல்லபாய் பட்டேல் தெரு.சீர்காழி நாள்.14.02.2018 | ரூ.7,56,525 | ரூ. 7,94,351 | ரூ.7,57,125 | ரூ.**12,20,000/-** |
| 5 | நகராட்சி எல்லைக்குட்பட்ட இடத்திற்கு வரும் யாத்ரீகர்கள் ஊர்திகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு பி.அன்பழகன் வல்லபாய் பட்டேல் தெரு.சீர்காழி நாள்.14.02.2018 | ரூ.226800/– | ரூ.238140/– | ரூ.236980/– | ரூ. 320000/– |
| 6 | தேர்மேலவீதி வடமேற்பாக்கி சந்து கட்டண கழிப்பறைக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு கே. பரசுராமன் திருக்கோலக்கா தெரு சீர்காழி | ரூ.112875/– | ரூ.118801/– | ரூ.113058/– | ரூ.125000/– |

அலுவலக குறிப்பு.1) வரிசை எண் 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சென்ற ஆண்டு ஏலத் தொகையினை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையை விடவும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி உள்ளதால் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம். ஒப்பந்தப்புள்ளி பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4372/2017 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்–182 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.9

இந்நகராட்சிக்கு சொந்தமான 2018 – 2019 முதல் 2020 – 2021 வரை மூன்றாண்டு குத்தகை உரிமத்தினை அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 23.02.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் கோரி எவரும் முன்வரவில்லை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே கீழ்கண்ட இனங்களுக்கு வரப்பெற்றுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல இனங்களின் விவரம் | உயர்ந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்த வரின் பெயர் மற்றும் முகவரி/ ஒப்பந்தப்புள்ளி நாள். | உயர்ந்த ஒப்பந்தப்புள் ளி 2016 – 2017 ம் ஆண்டிற்கா ன (ஓராண்டு தொகை ) | சென்ற ஆண்டு தொகை (2017 – 2018) | மூன்றாண் டு சராசரி தொகை | தற்போது உயர்ந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள் ள தொகைரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி ஆடுவதை செய்இம் இடத்தில் கட்டணம் வாலிக்கும் உரிமம் | திரு பி.சாகுல் அமீது ஜெயந்திரர் நகர் விளந்திடசமுத்திரம், சீர்காழி நாள். 23.02.2018 | ரூ. **29400/-** | ரூ. 30870/– | ரூ. 29424/– | ரூ. **72255/-** |
| 2 | புதிய இபஸ்ந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியளறைக்கு கட்டணம் வாலிக்கும் உரிமம் | திரு கே.பிரகாசம் கீழதென்பாதி சீர்காழி. நாள்.23.02.2018 | ரூ.3,37,207/– | ரூ.3,54,067 /– | ரூ.3,37,475 /– | ரூ.**520000/-** |

அலுவலக குறிப்பு.1) வரிசை எண் 1 முதல் 2 வரை உள்ள இனங்களுக்கு சென்ற ஆண்டு ஏலத் தொகையினை

விடவும் மூன்றாண்டு சராசரி தொகையை விடவும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி

<table>
<tr><td></td><td>உள்ளதால்<br>உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஒப்பந்தப்புள்ளி பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>2) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4372/2017 /அ1)<br><br>நகர்மன்ற தீர்மான எண்–183 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>பொருள் எண். 10</td><td>இந்நகராட்சியின் பொது நிதி திட்டம் -2017-2018 ன்கீழ் சீர்காழி நகராட்சியின் சுகாதார பணிக்கு 6 எண்ணிக்கை புதிய டம்பர் பிளேசர் பிண்கள் விநியோகம் செய்யும் பணிக்க ரூ.4,25,000/- 15.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ், குத்தாலம்.</td><td rowspan="2">ரூ.3,60,000.00</td><td>ரூ.3,59,400.00</td><td>(-) 0.17 % (குறைவு )</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் வேலுக்குடி</td><td>ரூ.3,60,600.00</td><td>(+) 0.17 % ( அதிகம் )</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ சரவணா ஹார்டுவேஸ், குத்தாலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.17% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>நகர்மன்ற தீர்மான எண்–184 நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>பொருள் எண்.11</td><td>சீர்காழி நகராட்சி பகுதியில் 2017 ல் மழை வெள்ள காலத்தில் ஏற்ப்பட்ட ஒக்கி புயலால் பழுதடைந்த சாலைகளை தற்காலிக சீரமைப்பு செய்திட நகராட்சி நிர்வாக ஆணையரக கடித ந.க.எண்.29074/2017/இ2 நாள்-13.03.2018 ன் படி ரூ.5.95 இலட்ச்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் தார் சாலைகளை தற்காலிக சீரமைப்பு செய்திட புளிச்சக்காடு மெயின் ரோடு, புதிய பேருந்து நிலைய வடபுறம், தெற்கு ரத வீதி, கீழ ரத வீதி மற்றும் திருத்தாலமுடையார் தோப்புத் தெரு ஆகிய இடங்களை நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் நேரில் ஆய்வு செய்து மேற்படி பணிகளை மேற்க்கொள்ள கூறிய அறிவுரையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.95 இலட்ச்சத்தை வெள்ள நிவாரண நிதி திட்டம் - 2017 (இயற்கை இடர்பாடுகள்)ன் கீழ் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>நகர்மன்ற தீர்மான எண்–185நாள்.19.03.2018. அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

(ஓம்) திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,

இடம்–சீர்காழி தனி அலுவலர் மற்றும் ஆணையர்

நாள்–19.03.2018 /உண்மை நகல்/ சீர்காழி நகராட்சி.

ஆணையர்

சீர்காழி நகராட்சி.

COUCIL-2018 MAR SP OFFICER